


9/11 தாக்குதலுக்குப் பிறகு, 'பயங்கரவாத ஒழிப்பு' என்பதை ஒரு சர்வதேச மந்திரமாக்கி, ஆப்கனிஸ்தான் மீது அமெரிக்கா தாக்குதல் தொடுத்ததும், தாலிபன்கள் காலியானதும், ஒசாமாவும் முல்லாவும் காணாமல் போனதும், இன்றுவரை அவர்களைத் தேடிக்கொண்டிருப்பதும் எல்லோருக்கும் தெரிந்த விஷயம்தான்.

தெரியாத விஷயம் ஒன்றுண்டு. அமெரிக்காவின் தொடர் தாக்குதல் மற்றும் தேடுதல் நடவடிக்கைகளால், அல் காயிதாவின் பலத்தில் நூறு கிராம் கூடக் குறையவில்லை என்பதுதான் அது. ஜோர்டன் குண்டு வெடிப்புகள், லண்டன் தாக்குதல்கள் என்று வருஷத்துக்கு ஒரு தீபாவளி என்கிற திட்டத்தை அவர்கள் மாற்றிக்கொள்ளவேயில்லை. எப்படி அல் காயிதா சூடானில் இருந்தபோது, கொஞ்ச நாளைக்கு ஆள் எங்கே என்று தெரியாமல் தேடிக்கொண்டிருந்தார்களோ, அதே மாதிரி இப்போது பாகிஸ்தானிலோ, ஆப்கனிலோ இருப்பது தெரிந்தும், கரெக்டான இடம் தெரியாமல் அல்லாடிக்கொண்டிருக்கிறார்கள்.

அவ்வப்போது, அல் ஜவாஹிரியிடமிருந்து மீடியாவுக்கு டேப் வருகிறது. அல்லது அறிக்கை எதாவது வருகிறது. கருடா சௌக்கியமா என்று அக்கறையுடன் விசாரிக்கத்தான் செய்கிறார்கள். ஆனானப்பட்ட அமெரிக்காவால் அவர்கள் இருக்கும் இடத்தைக்கூடக் கண்டுபிடிக்க முடியவில்லை என்பதை ஒரு கணம் தியானம்போல் நினைத்துப் பாருங்கள்!

அல் காயிதா என்கிற அமைப்பு, எப்பேர்ப்பட்ட வலிமைமிக்க இயக்கம் என்பது புரிய வரும்.

சீனா, ஜப்பான் போன்ற மிகச் சில தேசங்கள் தவிர, உலகம் முழுவதும் அல் காயிதா நிறைந்திருக்கிறது என்கிற உண்மையை ஜீரணித்துத்தான் ஆகவேண்டும். நேரடியாக இல்லாத இடத்தில் உப தேவதைகள் மூலம். உள்ளே நுழையாத இடங்களில் உத்தரவுகளின் மூலம். காற்று நுழையாத பிராந்தியங்களில் தனது காசு மூலம். ஆண்டவனே நுழைய முடியாத இடங்களில் கூட ஆயுதங்களின் மூலம்.

தமது பயங்கரவாதச் செயல்களுக்கு அல் காயிதா சொல்லும் காரணம் மிக எளிமையானது. பிரசித்தி பெற்ற 'நாயகன்' திரைப்பட வசனம்தான் அது. 'அவங்கள நிறுத்தச் சொல்லு, நான் நிறுத்தறேன்.'

இஸ்லாத்துக்கு எதிரான சக்திகள் என்று அல் காயிதா தொடர்ந்து சொல்லிவந்திருக்கும்போதும், அந்த இயக்கம் குறிப்பிடும் தேசம், அமெரிக்காதான் என்பது வெளிப்படை. பாலஸ்தீன் முஸ்லிம்களுக்காக அவ்வப்போது அனுதாபம் தெரிவிப்பதும், இஸ்ரேலுக்கு எதிரான கண்டனங்களை வெளியிடுவதும் அல் காயிதாவின் செயல் திட்டங்களுக்கு உட்பட்ட விஷயமே என்றாலும், இஸ்ரேலுக்கு எதிரான நேரடித் தாக்குதல் என்று அந்த இயக்கம் இன்றுவரை ஏதும் செய்யவில்லை என்பதையும் கவனிக்க வேண்டும்.

பாலஸ்தீன் போராளிகளுக்கு அல் காயிதா சில சமயங்களில் பயிற்சி அளித்திருக்கிறது.

தன்னுடைய போராளிகளைப் பாலஸ்தீன் யுத்தத்தில் பங்குபெற அனுப்பியிருக்கிறது. அவ்வப்போது ஆயுத உதவிகள், எப்போதும் அன்பு மற்றும் அனுதாபம் எல்லாம் உண்டுதான். ஆனாலும், இஸ்ரேலின் மீது அல் காயிதாவின் நேரடித் தாக்குதல் ஏன் இல்லை என்பதை யோசிக்கலாம்.

முதலாவது காரணம், அல் காயிதா ஒருபோதும் இஸ்ரேலை ஒரு பிரதான எதிரியாகக் கருதியதில்லை. கவனம் செலுத்திப் பொருட்படுத்தவேண்டிய தேசமாக நினைத்ததில்லை. அமெரிக்காவைத் தட்டிவைத்தால், இஸ்ரேல் தானாக அடங்கிவிடும் என்பதுதான் அல் காயிதாவின் கருத்து என்று நினைக்க வேண்டியிருக்கிறது.

இந்த விஷயத்தில், பிற அத்தனை மத்தியக் கிழக்கு தேசங்களின் போராளி இயக்கங்களின் கருத்திலிருந்து முற்றிலுமாக அல் காயிதா மாறுபடுகிறது. ஹமாஸ், ஹிஸ்புல்லா, பி.எல்.ஓ.வின் உறுப்பு இயக்கங்கள் தொடங்கி நூறு சதவிகித மத்தியக் கிழக்கு இயக்கங்களும், இஸ்ரேலை வரிந்து கட்டிக்கொண்டு எதிர்த்துக்கொண்டும் தாக்கிக்கொண்டும் இருக்கும் காலத்தில், அல் காயிதா ஓர் ஊசிப்பட்டாசு கூட அங்கே கொளுத்திப் போட்டதில்லை.

பாலஸ்தீன் என்கிற ஒரு குறிப்பிட்ட பிராந்தியத்துக்காக யுத்தம் செய்வது, தன்னுடைய செயல்திட்டத்தில் இல்லை என்று, அல் காயிதா சொல்லாது. ஏனெனில், சவூதி அரேபியாவிலிருந்து அமெரிக்கப் படைகளைத் துரத்துவதற்காக எத்தனை குண்டு வெடித்திருக்கிறார்கள்! குவைத்துக்காக எத்தனை! ஈரான், ஈராக், ஆப்கனிஸ்தான், பாகிஸ்தான் என்று எந்தெந்த தேசத்து விவகாரங்களிலெல்லாம் அமெரிக்கா மூக்கை நுழைக்கிறதோ, அதற்கெல்லாம் அல் காயிதா குறைந்தபட்சம் அறிக்கை அளவிலான எதிர்ப்பையாவது பதிவு செய்யத் தவறியதில்லை.

அமெரிக்காவையே கண்ணுக்குள் விரல் விட்டு ஆட்டக்கூடிய சக்திமிக்க இயக்கமாக இருக்கும் அல் காயிதா, பாலஸ்தீன் விஷயத்தில் கொஞ்ச காலமாவது முழு மூச்சுடன் ஈடுபட்டிருந்தால், ஒருவேளை அங்கே ஏதாவது நல்லது நடந்திருக்குமோ என்று நினைக்காத மத்தியக் கிழக்கு தேசங்களே இல்லை.

ஆனால் ஏன் செய்யவில்லை?

எப்படி யோசித்தாலும், இஸ்ரேல் ஒரு கொசு என்பதுதான் அல் காயிதாவின் எண்ணமாக இருக்கவேண்டும் என்கிற இடத்தில்தான் வந்து நிற்கவேண்டியிருக்கிறது. எப்போது வேண்டுமானாலும் நசுக்கிவிடலாம் என்கிற எண்ணத்துடனேயே, எத்தனையோ காலங்களைக் கடத்தி வந்து இருக்கவேண்டும்.

இரண்டு மாதங்களுக்கு முன்னால் நடைபெற்ற இஸ்ரேல் - லெபனான் யுத்தத்தை எடுத்துக்கொள்ளுங்கள். எத்தனை இழப்புகள்! எத்தனை கட்டடங்கள் மண்ணோடு மண்ணானதை டி.வி.யில் பார்த்தோம்? எத்தனை இஸ்ரேலியப் போர் விமானங்கள் சாரி சாரியாகப் பறந்து, குண்டு மழை பொழிந்தன! ஒரு விமான எதிர்ப்பு ஏவுகணை கூடக் கைவசமில்லாத நிலையில், ஹிஸ்புல்லா எப்படி அவஸ்தைப்பட்டுக்கொண்டு நின்றது! ஆனாலும் தன் சக்திக்கு உட்பட்ட அளவில் எதிர்த்துப் போராடி, இஸ்ரேலியத் தரைப்படையினரை எல்லைக்கு அப்பால் விரட்டவே செய்தார்கள்.

அவர்கள் சொந்தச் சகோதரர்கள் இல்லையா? அல் காயிதா அப்போது என்ன செய்துகொண்டிருந்தது? நட்பு இயக்கம்தானே? ஒரு ஒத்தாசைக்கு நாலு சித்தாள் அனுப்பக் கூடாதா? ஏன் செய்யவில்லை? இத்தனை அழிவுக்குப் பிறகும் இஸ்ரேல் பரவாயில்லையா? வெறும் கண்டனம் போதுமா?

கேள்விகள் எழத்தான் செய்யும். ஆனால், பதில் ஒன்றுதான். அல் காயிதாவின் நோக்கம்

அமெரிக்கா மட்டும்தான்.

என்றால், லண்டன் குண்டுவெடிப்புகள்? இங்கிலாந்து அமெரிக்காவின் நட்பு நாடு என்றால், இஸ்ரேல் என்ன எதிரி நாடா?

இதுவும் உயிருள்ள கேள்வியே. சந்தேகமே இல்லை. இதற்குப் பதில், இங்கிலாந்து நட்பு நாடு; இஸ்ரேல் சிஷ்ய நாடு. அவ்வளவுதான். ஒசாமா பின்லேடனுக்கு மகாபாரதம் தெரியுமா, தெரியாதா என்பது நமக்குத் தெரியாது. ஆனால், அவரைப் பொறுத்தவரை, அமெரிக்கா துரியோதனன் என்றால், இங்கிலாந்து கர்ணன். இஸ்ரேல் என்பது துச்சாதனனோ, விகர்ணனோதான்.

இதில் வியப்புக்குரிய விஷயம், மத்தியக் கிழக்கின் பிற தீவிரவாத இயக்கங்கள் எதுவுமே, இது சம்பந்தமாக அல் காயிதாவை நோக்கிக் கேள்வி கேட்டதில்லை என்பதுதான்! 'அமெரிக்காவைத் தாக்குவது மட்டும்தான் என் லட்சியம்' என்று அல் காயிதா சொல்லியிருக்குமானால், இந்த விவாதத்துக்கே இடமிருந்திருக்காது. 'இஸ்லாத்துக்கு எதிரான அனைத்து சக்திகளின் மீதும் தாக்குதல் நடத்துவோம்' என்று சொல்லிவிட்டு, இஸ்ரேலுக்கு எதிராக ஒரு துரும்பைக்கூடக் கிள்ளிப் போடவில்லையே, ஏன் என்று சந்தேகம் வருவது இயற்கைதானே?

ஆம். இஸ்ரேல் -நிறைய, மிக நிறையப் பேசப்பட வேண்டியதொரு தேசம். சுருக்கமாக இப்படிச் சொல்லலாம். அல் காயிதா நீங்கலாக, மத்தியக் கிழக்கு தேசங்களில் தோன்றி வளர்ந்து வாழும் அத்தனை போராளி இயக்கங்களுக்கும், இந்த ஒரு தேசம் மிக முக்கிய இலக்காக இருக்கிறது. பெரும்பாலான இயக்கங்கள் தோன்றியதற்கே இதுதான் காரணமாகவும் இருந்திருக்கிறது!

அங்கே எல்லா நாடுகளும் முஸ்லிம் நாடுகள். இது ஒன்றுதான் யூத தேசம் என்பதுதான் காரணமா?

பரப்பளவு என்று பார்த்தோமானால், தமிழ் நாட்டில் நாலில் ஒரு பங்கு சைஸ் கூடத் தேறாது. ஒரு பெரிய மாவட்டம் என்று சொல்லக்கூடிய அளவுக்கு ஒரு தேசம். ஆனால், ஒட்டுமொத்த மத்தியக் கிழக்கு தேசங்களினாலும் அதனை ஒன்றும் செய்யமுடியவில்லை. ஊருக்கு ஊர், பேட்டைக்குப் பேட்டை ஒரு போராளி இயக்கம் தோன்றி, இஸ்ரேலுக்கு எதிராக என்னவாவது செய்துகொண்டிருக்கிறது. 1948-ல் இஸ்ரேல் தோன்றிய தினத்திலிருந்து இன்றுவரை அவர்களது யுத்தமும் ஓயவில்லை, இஸ்ரேலும் அடங்கியபாடாகத் தெரியவில்லை.

நேற்றைய லெபனான் யுத்தம் வரைக்கும் கணக்கெடுத்துப் பார்த்தால், அமெரிக்காவின் அடுத்த வாரிசு என்று சொல்வதற்கு எல்லா வகையிலும் தகுதி படைத்த தேசமாக இஸ்ரேல் இருக்கிறது. யுத்தங்களால் கட்டப்பட்ட தேசம். யுத்தங்களால் வாழும் தேசம். அத்துமீறல்களை ஆத்மசுத்தியுடன் செய்கிற தேசம். பண பலம், தொழில்நுட்ப பலம், ஆயுத பலம், உளவு பலம் என்று அப்படியே அமெரிக்காவை அச்செடுத்த கட்டுமானம்.

ஏன் அல் காயிதா இதை அவ்வளவாகப் பொருட்படுத்தவில்லை?

இந்தக் கேள்வி உங்கள் மனத்தில் ரீங்கரித்துக்கொண்டே இருக்கட்டும். ஒன்றும் அவசரமே இல்லை. நிதானமாகக் கடைசியில் பதில் தேடிக்கொள்ளலாம். இப்போது அடுத்த பட்டறைக்குப் போகவேண்டிய நேரம் வந்துவிட்டது.

ஹிஸ்புல்லா ரசகுல்லா இல்லை. ஹிஸ்புல்லா. இரண்டு மாதங்களுக்கு முன், இந்தப் பெயர் நம்மில் பெரும்பாலானவர்களுக்கு மிகப் புதிதாகத் தெரிந்திருக்கும். இஸ்ரேல் - லெபனான் யுத்தம் மூண்டிராவிட்டால், 'ஓ, இப்படி ஒரு கோஷ்டி இருக்கிறதா?' என்று கேட்டிருப்போம். அல் காயிதாவுக்கே க்ளாஸ் எடுத்த வாத்தியார்கள் நிறைந்த குழு என்று சொன்னபோது, அப்படியா என்று லேசாக வியப்பு மட்டுமே எழுந்திருக்கும். உலகின் மாபெரும் ஆள் கடத்தல் கோஷ்டி

என்று சொன்னால், அட என்று வியந்திருப்போம்.

அதற்குமேல் பெரிதாக ஏதும் இருந்திருக்க வாய்ப்பில்லை. காரணம் மிக எளிமையானது. அல் காயிதாவுக்கு ஒசாமா பின்லேடன் என்று ஒரு முகம் இருக்கிறது. எல்.டி.டி.ஈ என்று சொன்னால், உடனே பிரபாகரன் என்று சொல்லிவிடுவோம். ஹமாஸ் என்று சொன்னால், உடனே ஷேக் அகமது யாசின் என்கிற கிழவனாரின் முகம் நினைவுக்கு வரும்.

அந்த மாதிரி, ஹிஸ்புல்லா என்று சொன்னதும் நினைவுக்கு வரக்கூடிய முகம் ஏதும் நமக்குத் தெரியாது. சில முகங்கள் அங்கும் இருக்கின்றன. எதுவும் நம்முடைய மீடியாவுக்கு வரவில்லை என்பதுதான் காரணம்.

உண்மையில் அந்தச் சில முகங்கள் கூட ஹிஸ்புல்லாவில் முக்கியமில்லை. ஹிஸ்புல்லாவில் முக்கியம் என்று சொன்னால், அவர்களுடைய செயல்கள்தான். அல் காயிதா ஒரு தாக்குதலுக்கும் அடுத்த தாக்குதலுக்கும் எப்போதும் குறைந்தபட்சம் ஒரு வருஷ இடைவெளியாவது விடும். ஹிஸ்புல்லாவுக்கு இண்டர்வெல் என்பதே கிடையாது. அடி, அடி, மரண அடி! அல் காயிதா என்பது வெட்ட வெட்ட முளைக்கும் கார்த்தவீர்யார்ச்சுனன் என்றால், ஹிஸ்புல்லா வெட்டவே முடியாத வெட்டவெளிக் காற்று. 'இஸ்ரேல்தான் இலக்கு, அழிக்காமல் ஓயமாட்டோம்' என்று சொல்லிவிட்டு, இயக்கத்தை ஆரம்பித்த தினம் தொடங்கி, இன்றுவரை ஒருநாள் விடாமல் என்னவாவது செய்துகொண்டேதான் இருக்கிறார்கள்.

ஒரு பக்கம் ஆள் கடத்துவார்கள். இன்னொரு பக்கம் ஏரோப்ளேன் கடத்துவார்கள். நேரடியாக யுத்த களத்தில் ஆயுதமேந்திப் போரிடுவார்கள். லெபனான் எலக்ஷனில் நின்று ஜெயித்து பார்லிமெண்டுக்குப் போய் மக்கள் பணி ஆற்றுவார்கள். அமைச்சர் ஆவார்கள். அடித்தும் நிமிர்த்துவார்கள்.

புரிந்துகொள்வது கொஞ்சம் கஷ்டம்தான். ஆனாலும் பார்த்துத்தான் ஆகவேண்டும். ஹமாஸ் உள்பட அனைத்து இஸ்ரேல் எதிர்ப்பு இயக்கங்களும் ஏதோ ஒரு கட்டத்தில் இஸ்ரேலுடன் கொஞ்சமே கொஞ்சம் சமரசம் செய்துகொண்டு, பேச்சுவார்த்தை, இஸ்ரேலை அங்கீகரிப்பது என்று இறங்கி வந்துவிட்ட நிலையில், இன்றைக்கு வரைக்கும், விட்டேனா பார் உன்னை என்று வரிந்து கட்டிக்கொண்டு நிற்கும் ஒரே இயக்கம் ஹிஸ்புல்லாதான்.

நம்பித்தான் ஆகவேண்டும். இந்தியா வரைக்கும் விரிந்த சிறகு உண்டு அதற்கு!